1971 சூலை 30]

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரத்திலுள்ள ரோட்டரி கிளப் அந்த மாயூரம் அரசாங்க மருத்துவமனையில் இத்தகைய இரத்த சேமிப்பு நிலையத்தை உருவாக்குவதற்கு நிதி உதவி தர முன் வந்திருக்கிறார்கள். அதை ஏற்று விரைவில் செயல்பட அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அந்த ரோட்டரி கிளப்-சுழல் கழகம் 15,000 ரூபாய் அளவிற்கு பல்வேறு கருவிகளை இந்தக் குருதி சேமிப்பு நிலையத்திற்கு வழங்கியிருக்கிறது. 15,000 ரூபாய் மதிப்புள்ள அந்தக் கருவிகள் இந்தச் சேமிப்பு நிலையத்தைச் செம்மையாக நடத்தப் போதுமானதாக இல்லை. அதை மேலும் ஒழுங்குபடுத்தி நடத்த அங்கு ஏற்படுத்த வேண்டிய சில ஏற்பாடுகள் இன்னும் பாக்கியாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் செய்த பிறகு முறைப்படி இந்தக் குருதி சேமிப்பு நிலையம் செயல்படத் தொடங்கும்.

கால்நடைக் கன்றுகள் வளர்ப்பு

* 559 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நல்ல கால்நடைக் கன்றுகள் வளர்ப்பவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த மானியத்தொகை சமீபத்தில் நிறுத்தப்பட்டுள்ளதா?

(இ) இது குறித்து கன்று வளர்ப்பவர்களிடமிருந்து சமீபத்தில் முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) தமிழகத்தில் நல்ல கால்நடைக் கன்றுகள் வளர்ப்பவர்களுக்கு மானியத்தொகை உதவித் தொகை கொடுக்கும்படியான திட்டத்தைத் தொடர்ந்து நடத்த அரசு ஒப்புதல் அளிக்கவில்லை.

(இ) இது குறித்து கன்று வளர்ப்பவர்களிடமிருந்து முறையீடு ஏதும் பெறப்படவில்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்தக் கால்நடை வளர்ப்பதிலே சாதாரண மக்களும், நல்ல கால்நடைக் கன்றுகளை வளர்க்க மானியம் கொடுத்ததன் காரணமாக அதை வளர்ப்பதற்குப் பல்வேறு கிராமங்களிலுள்ள மக்கள் முன்வந்தார்கள். மானியம் நிறுத்தப்பட்டதால் இந்தக் கன்றுகளைச் சரியானபடி ஊட்டமுள்ள கன்றுகளை வளர்க்க வாய்ப்பில்லாமல் வியாபாரிகளுக்கு விற்றுவிடும் துர்ப்பாக்கியமான நிலை இருப்பதைப் போக்க அரசு மீண்டும் அந்தத் திட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, கன்று வளர்ப்பதே அவைகளை நன்றாக வளரச் செய்து விற்பதற்காகத்தான், கன்றை வளர்த்து விற்றால் லாபம் வருகிறதால் கன்றுகளை

வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். சப்சிடி என்பது உதவி என்பது, ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை எய்துவதற்கு ஊக்கம் அளிக்கப்படுவது. 3, 4 ஆண்டுக்காலமாக அந்த திட்டம் செயல்பட்டதன் காரணமாக, காளைக் கன்றுக்கு 10 ரூபாயும், கிடாரிக் கன்றுக்கு 5 ரூபாயுமாக வழங்கப்பட்டு, அவை தரம் உயர்ந்த இனத்திலிருந்து பிறந்தவை என்ற சான்றிதழோடு வளர்க்கப்பட்டு மக்களிடையே பெருவாரியாக அறிமுகமான பிறகு அந்தத் திட்டத்தை நடத்துவது அந்த நோக்கத்திற்கே, குறிக்கோளுக்கே மாறுபட்டதாகும். நோக்கத்தை பாபுலரைஸ் செய்வது, எல்லோருக்கும் அறிமுகம் செய்வது, எல்லோரும் பழகிக்கொள்ள வேண்டுமென்ற கருத்தில் மேற்கொள்ளப்பட்டதாகும். திட்டத்தின் குறிக்கோள் ஓரளவு நிறைவேறிவிட்டதால் தொடர்ந்து நாம் அரசாங்கத்தின் பணத்தைச் செலவழிப்பது என்பது அரசாங்கத்தின் குறிக்கோளுக்கு ஏற்றதாக இல்லை.

Temporary Assistant Dental Surgeons

* 560 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon the Minister for Public Health be pleased to state—

(a) whether Assistant Dental Surgeons in Madras Medical Service are being kept temporary for the past six years; and

(b) if so, the steps taken to regularise them?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு மருத்துவப் பணியில் உள்ள தற்காலிக உதவிப் பல் வைத்தியர்களை நிரந்தரமாக்கும் பொருட்டு, தமிழ்நாடு பொதுப் பணி தேர்வுக் கழகத்தை 42 உதவி பல் வைத்தியர்களைத் தேர்ந்தெடுக்குமாறு அரசுக் கேட்டுக்கொண்டுள்ளது. தமிழ்நாடு பொதுப்பணித் தேர்வுக் கழகமும் பல் வைத்தியத்தில், பட்டப்படிப்பு (பி.டி.எஸ்.) பெற்றுள்ள நபர்களிடமிருந்து உதவிப் பல் வைத்தியர்களாக நியமிக்கப்படுவதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. தமிழ்நாடு மருத்துவப் பணியில் தற்போது உள்ள தற்காலிக உதவிப் பல் வைத்தியர்கள் பொதுப்பணித் தேர்வுக் கழகத்திற்கு மனுச் செய்து அதன்மூலம் தங்கள் பணியை நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இம்மாதிரி அவர்கள் மெட்ராஸ் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு மனுச் செய்ய வேண்டுமென்றால் எந்த ஆண்டுத் தேர்வு அளவிலே எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பொதுவாக இப்படிப்பட்ட தமிழ்நாடு பொதுப்பணி தேர்வுக் கழகம் விளம்பரம் செய்து கேட்கின்ற விண்ணப்பங்கள் தகுதியுடைய அனைவரும் விண்ணப்பிக்கலாம். தகுதியுடையவர்களிடையே இந்த ஆண்டு வரையில் தேர்வு பெற்றவர்கள் என்ற தடை அங்கே இல்லை. ஆனால் கூடுமானவரையில் அவர்கள் தகுதியைப் பார்த்து, நீண்ட அனுபவத்தைப்பார்த்து, ஏற்கனவே பார்த்த பணியின் அனுபவத்தைப் பார்த்து இயன்றவரையில் அங்கிருக்கிற பொதுவகையிலே தேர்ந்